DTERT
25 JUL 2005

<u>சுருக்கம்</u>

பள்ளிக் கல்வி– ஆசிரியர் பயிற்சி– 2005–2006ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் சேர்க்கை– நெறிமுறைகள்– வயது வரம்பு– அதிகபட்ச வயது வரம்பு– நிர்ணயம் செய்து– ஆணைகள் வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித் (யு1) துறை

அரசாணை (டி) எண். 171 நாள்: 25.07.2005.

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (டி) எண்.111, பள்ளிக் கல்வித் துறை, நாள் 17.7.2003.
2. அரசாணை (நிலை) எண். 185, உயர் கல்வித் துறை, நாள் 13.6.2005.
3. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் கடிதம் ந.க.எண். 6886/சி2/2005 நாள் 9.7.2005.

-------

<u>ஆணை.</u>

பார்வை ஒன்றில் கண்டுள்ள அரசாணையில் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் சிறுபான்மையல்லாதோர்/ சிறுபான்மை நிறுவனங்கள் மற்றும் அரசு உதவி பெறாத சிறுபான்மையல்லாதோர்/ சிறுபான்மை நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள மொத்த சேர்க்கை இடங்களுக்கும் மாணவர் சேர்க்கைக்கான நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. அதன்படி மாணவர் சேர்க்கையில், குறைந்தபட்ச வயது ஜூலை 31ம் தேதி அன்று குறைந்தபட்ச வயது 17 நிரம்பியும், அதிகபட்ச வயது 25க்கு மிகாமலும் இருக்க வேண்டும் எனவும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர் மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு அதிகபட்ச வயது 30 எனவும், அனாதை, கணவரால் கைவிடப்பட்ட பெண்டிர் மற்றும் விதவைகளுக்கான அதிகபட்ச வயது 40 எனவும் வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டன.

2. தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் சுயநிதி தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் சார்பாக வயது வரம்பு தளர்வு அளிக்கத் தற்போது கோரிக்கை சமர்ப்பித்துள்ளனர் எனவும், பார்வை 2ல் கண்டுள்ள அரசாணையில் பிளஸ் சேர்க்கைக்கு வயது வரம்பு 2005–2006 முதல் நீக்கப்பட்டுள்ளதாகவும், இதனை அடுத்து ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கும் வயது வரம்பு நீக்கப்பட கோரிக்கைகள் பெற வாய்ப்புள்ளது எனவும் ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். மேற்காண் சூழ்நிலையில் ஆசிரியர் பட்டயப் பயிற்சி சேர்க்கைக்கு தற்போது உள்ள அதிகபட்ச வயது 25 என்பதை நீக்கி கூடுதலாக ஐந்து வயது வரை அதிகரித்து பொதுப்பிரிவுக்கு 30 வயது எனவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவருக்கு 35 வயது எனவும், அனாதை, கணவரால் கைவிடப்பட்ட பெண்டிர் மற்றும் விதவைகளுக்கு 40 வயது எனவும் நிர்ணயம் செய்யலாமா அல்லது பிளஸ் சேர்க்கைக்கு உள்ளது போல அதிகபட்ச வயது வரம்பினை தவிர்க்கலாமா என்பதற்கும் ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் ஆணைகள் கோரியிருந்தார்.

(கு.பி.பா.)

3. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கோரிக்கையினை அரசு கவனமுடன் பரிசீலித்து, ஜூலை 31ம் தேதியன்று அதிகபட்ச வயது 30க்கு மிகாமல் இருக்க வேண்டும் எனவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர் மற்றும் உடல் ஊனமுற்றோர்க்கு அதிகபட்ச வயது 35 ஆக இருக்கலாம் எனவும், அனாதை, கணவரால் கைவிடப்பட்ட பெண்டிர் மற்றும் விதவைகளுக்கான அதிகபட்ச வயது 40 எனவும் நிர்ணயிக்கலாம் என முடிவு எடுத்துள்ளது.

4. அதன்படி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், அரசு உதவிபெறும் சிறுபான்மையல்லாதோர் / சிறுபான்மை மற்றும் அரசு உதவிபெறாத சிறுபான்மையல்லாதோர் / சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கைக்கான நெறிமுறைகள் வகுக்கப்பட்ட, பார்வை 1ல் கண்டுள்ள அரசாணை பத்தி 1(ii)இல் வரையறுக்கப்பட்டுள்ள வயது வரம்பினைக் கீழ்க்கண்டவாறு திருத்தியமைத்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன:-

"ஜூலை 31ம் தேதி அன்று அதிகபட்ச வயது 30க்கு மிகாமல் இருக்க வேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர் மற்றும் உடல் ஊனமுற்றோர்க்கு அதிகபட்ச வயது 35 ஆகும். அனாதை, கணவரால் கைவிடப்பட்ட பெண்டிர் மற்றும் விதவைகளுக்கான அதிகபட்ச வயது 40 என நிர்ணயிக்கப்படுகிறது".

(ஆளுநரின் ஆணைப்படி)

கிரிஜா வைத்தியநாதன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர்,
சென்னை–6.

அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.

<u>நகல்:</u>

அரசாணை (1டி) எண்.111, பள்ளிக் கல்வி, நாள் 17.7.2003.
மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித்துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.